FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | இலங்கை வரலாறு | நேரம் :- 3.10 மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க.**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.
- வழங்கப்பட்டுள்ள நேரம் பகுதி I, பகுதி II இற்கும் உரியதாகும்.

- **இல 01 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) 1. பதிராஜவெல 2. இப்பன்கட்டுவ 3. உடமல்ல
4. மாந்தை 5. பெல்லன்பதி பெலஸ்ஸ ( )

2) 1. மல்வத்து ஓயா 2. மோதரகம் ஓயா 3. மீ ஓயா
4. தப்தி நதி 5. மகா ஓயா ( )

3) 1. இத்திய 2. உத்திய 3. சாம்பல 4. சங்கமித்தை 5. சுமண ( )

4) 1. பனையமாற 2. பிளையமாற 3. புலகத்த 4. தாடிக 5. குட்டபாரிந்த ( )

5) 1. மாகம 2. களனி 3. சேரு 4. கிரி 5. தீகவாவி ( )

6) 1. சத்தாதீசன் 2. லஞ்ச தீசன் 3. தூலத்தனன்
4. கல்லாடநாகன் 5. வட்டகாமினி ( )

7) 1. லீலாவதி 2. கல்யாணநதி 3. வீரபாகு
4. விக்கிரமபாகு 5. ஆயஸ்மன்ன ( )

8) 1. லக்மினி பஹன 2. லங்காலோகய 3. சரவி சந்தரெஸ
4. பராபவ 5. சிங்ஹன ஜாதிஸ ( )

9) 1. குருவேபத்த 2. மடிகே பத்த 3. கீபத்த
4. கின்னரபத்த 5. பத்வடன ( )

10) 1. ஹென்றிமங் மேசன்மூவர் 2. சோல்பரி பிரபு 3. ஒலிவர் குணதிலக
4. வில்லியம் கோபல்லாவ 5. D.S சேனநாயக்க ( )

- **இல 11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) 1. மிகிந்தலை – சேத்திய பர்வத
2. எலகர - ஆளிசார
3. யாப்பகூவ - கோவிந்தமலை
4. கண்டி - ஸ்ரீவர்த்தனபுர
5. நல்லூர் - சிங்கை நகரம் ( )

agaram.lk

12) 1. யாழ்ப்பாணம் - விஜயகூழங்கை சக்கரவர்த்தி
2. மினிப்பே - ஆதிபத புவனேகபாகு
3. சுபபர்வதம் - சுப தளபதி
4. கண்டி - வீர சுந்தர பண்டார
5. ஜம்புத்தோனி - 3ம் விஜயபாகு ( )

13) 1. கபிஸ்க - வலகம்பா
2. ரவிதேவ - வசபன்
3. நகரகீத்தி - 1ம் பராக்கிரமபாகு
4. தீக ஜந்து - எல்லாளன்
5. வேலுசுமண - துட்டகைமுனு ( )

14) 1. யாழ்ப்பாணக் கல்லூரி - அமெரிக்கன் மிஷனரி
2. பரமேஸ்வராக் கல்லூரி - பொன். இராமநாதன்
3. நாவலர் வித்தியாலயம் - பொன். அருணாசலம்
4. மியுசியஸ் கல்லூரி - பரமவிஞ்ஞார்த்த சங்கம்
5. சாகிராக் கல்லூரி - M. C. M சித்திலெப்பை ( )

15) 1. 1830 - கோல்புறூக் சீர்திருத்தம்
2. 1910 - குறூமக்கலம் சீர்திருத்தம்
3. 1920 - மனிங் டெவன்சியர் சீர்திருத்தம்
4. 1931 - டொனமூர் சீர்திருத்தம்
5. 1947 - சோல்பரி சீர்திருத்தம் ( )

- **இல 16 – 20 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16)

| X | Y |
|---|---|
| 1. பிரியங்கதிஸ்ஸ விகாரை | A. நிஸங்கமல்லன் |
| 2. ஜம்புகோள விகாரை | B. துட்டகைமுனு |
| 3. உத்தர, அபய பிக்குனி விகாரை | C. தேவநம்பிய தீசன் |
| 4. ரூவன்வெலிசாய | D. மகாசேனன் |
| 5. ரங்கொத் விகாரை | E. வசபன் |

1. ECDBA 2. BECDA 3. AECDB 4. DCBAE 5. CEBAD ( )

17)

| X | Y |
|---|---|
| 1. வரோதயன் | A. பரனவம்சம் |
| 2. லீலாவதி | B. ஆரியச்சக்கரவர்த்தி வம்சம் |
| 3. 1ம் விமலதர்மசூரியன் | C. தம்பதெனிய வம்சம் |
| 4. 2ம் பராக்கிரமபாகு | D. பேரதெனியா வம்சம் |
| 5. வசபன் | E. இலம்பகர்ண வம்சம் |

1. BACDE 2. BADCE 3. ADEBC 4. CBADE 5. DBCAE ( )

18)

| X | Y |
|---|---|
| 1. கொந்கல் கந்தை கல்வெட்டு | A. குடும்பத்தலைவர் பற்றிய விபரம் |
| 2. பெரியபுளியம் குளம் கல்வெட்டு | B. பருமக பற்றிய விபரம் |
| 3. கொரவக்கல கல்வெட்டு | C. பத்துகிராம பிரதானிகள் பற்றி விபரம் |
| 4. களுதிய பொக்குண கல்வெட்டு | D. போசனி அரசன் பற்றிய விபரம் |
| 5. எம்புல் அம்பே | E. தொட்டபோஜக பற்றிய விபரம் |

1. AEBCD 2. EBCDA 3. EABCD 4. BEACD 5. DBCEA ( )

agaram.lk

19) X Y

| X | | Y |
|---|---|---|
| 1. | பரண்டிக் கோயில் | A. இரத்தினபுரி |
| 2. | அம்பக்கே தேவாலயம் | B. பொலனறுவை |
| 3. | மகாசமன் தேவாலயம் | C. சிலாபம் |
| 4. | லங்காதிலக சிலைமனை | D. சீதாவாக்கை |
| 5. | முன்னேஸ்வரம் | E. கம்பளை |

1. EABCD 2. ABCDE 3. DABCE 4. DEABC 5. CDAEB ( )

20) X Y

| X | | Y |
|---|---|---|
| 1. | அச்சகம் நிறுவுதல் | A. ஹென்றி ஸ்டில் ஒல்கொட் |
| 2. | பகிரங்க விவாதம் | B. ஸ்ரீ சுமணதிஸ்ஸ தேரர் |
| 3. | பௌத்த பாடசாலைகள் | C. பியதாஸ சிரிசேன |
| 4. | மது ஒழிப்பு இயக்கம் | D. அநாகரிக தர்மபால |
| 5. | தேசப்பற்றை வளர்க்கும் இயக்கம் | E. மீகெட்டுவத்த குணானந்த தேரர் |

1. DEACB 2. BECDA 3. AECDB 4. CEADB 5. BEACD ( )

- **இல 21 – 25 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தவில்லை. அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) இலங்கையில் மகாயானம்.
1. இது வொகாரிய தீசன்மன்னன் காலத்தில் தலைகாட்ட முற்பட்டது.
2. இதனை சங்கமித்தை தேரி அறிமுகம் செய்தார்
3. இதன் முதல் அரசன் மகாசேனன்
4. இம் மதத்தின் வருகையால் புனித தந்த தாதுகள் இலங்கை வந்தது.
5. ஜேத்தவனராம இதற்கு அடிப்படையாக அமைந்த விகாரையாகும். ( )

22) கம்பளை இராசதானிக் காலம்.
1. இக்காலத்தில் கம்பளையின் கீழ் முழு இலங்கையும் ஒன்றுபட்டு இருந்தது
2. இங்கு தாயாதிவழி அரசுரிமை முறை காணப்பட்டது.
3. இக்கால கட்டத்தில் கடலாதெனிய விகாரை அமைக்கப்பட்டது.
4. ஆரிய சக்கரவர்த்திகள் இதன் மீது படையெடுத்தனர்.
5. இதன் இறுதி மன்னன் வீர அழகேஸ்வரன் ஆவான். ( )

23) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
1. இவன் சிறுவனாக இருந்த போது இவன் தந்தை நரேனப்பா ஆட்சி விடயங்களை கவனித்தார்.
2. இவன் பேரதெனியா வம்சத்தை சேர்ந்தவன்.
3. வெலிவிட்ட சரணங்கரதேரர் இவன் சமயகுருவாவார்.
4. இவர் காலத்தில் வில்லியம் பல்க் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.
5. இவர் உபாலி தேரர் உள்ளிட்ட குழுவினரை இலங்கை வரவழைத்தான். ( )

24) இலங்கையில் இறப்பர் பயிர்ச் செய்கையில் பரவல்.
1. 1877ம் ஆண்டளவில் இறப்பர் பயிர்ச்செய்கை இலங்கையில் அறிமுகமானது.
2. மோட்டார் வாகனத் தொழில் அபிவிருத்தியுடன் இதன் வளர்ச்சி தொடர்புபட்டிருந்தது.
3. தேயிலை விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி இறப்பர் பயிர்ச்செய்கையின் விருத்தியை தூண்டியது.
4. ஆரம்பத்தில் இறப்பர் நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் பயிரிடப்பட்டது.
5. இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் அகலவத்த என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ( )

agaram.lk

25) பிரித்தானியர் ஆட்சி காரணமாக ஏற்பட்ட விளைவுகள்.
1. சர்வதேச மொழியான ஆங்கில மொழியறிவு நாட்டினுள் பரவியமை.
2. போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் துறை வளர்ச்சியடைந்தமை.
3. ஏற்றுமதிக்கான பெருந்தோட்ட பயிர்கள் அறிமுகம் செய்தமை.
4. கைத்தொழில் புரட்சியின் நன்மைகளை இலங்கை அடையாதிருந்தமை.
5. பாராளுமன்ற ஆட்சி முறை.

- **இல 26 – 30 வரையுள்ள ஒவ்வொன்றிற்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளும் சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.**
  (A) யும் (B) மட்டும் சரியாயின் 1 எனவும்
  (B) யும் (C) மட்டும் சரியாயின் 2 எனவும்
  (C) யும் (D) மட்டும் சரியாயின் 3 எனவும்
  (A) யும் (C) மட்டும் சரியாயின் 4 எனவும்
  ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| **அறிவுறுத்தல்களின் சுருக்கம்** | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

26) முன் வரலாற்றுக் காலம் பற்றிய குறிப்புகளில் எது / எவை சரியானது / சரியானவை.
A) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கு முந்திய கால கட்டம் முன்வரலாற்றுக் காலகட்டம் என அழைக்கப்படும்.
B) இக்கால கட்ட மனிதன் உணவுத் தேவைக்காக முழுமையாக வேட்டையாடலில் தங்கியிருந்தனர்.
C) உடரஞ்ஞா மடத்தில் முன்வரலாற்றுக்கால வீடு ஒன்றின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.
D) இக்காலத்தில் இரும்பை பயன்படுத்த மனிதன் அறிந்திருந்தான். (    )

27) வசப மன்னனின் ஆட்சி பற்றிய குறிப்புக்களில் எது / எவை சரியானது / சரியானவை.
A) வசபன் இலம்பகர்ண வம்சத்தை சார்ந்தவன்.
B) வசபன் காலத்தில் வல்லிபுரம் பொற்சாசனம் அமைக்கப்பட்டது.
C) வசபன் கவுடு வாவியை கவுடுலு ஓயாவை வழிமறித்து அமைத்தான்.
D) வசபன் அநுராதபுரம் அடங்கலான சிறு பிரதேசத்தை நிர்வகித்தார். (    )

28) யாழ்ப்பாண இராச்சியத்தின் பொருளாதாரம் தொடர்பான கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை.
A) யாழ்ப்பாண இராச்சியத்தில் பிரதான பொருளாதார துறையாக விவசாயம் காணப்பட்டது.
B) இபன்பதூதாவின் கூற்றின் படி யாழ்ப்பான அரசன் முத்துக் குளிப்பின் மூலம் பெறுமதி வாய்ந்த முத்துக்களை ஏற்றுமதி செய்தான்.
C) விஜயநகரம், பாமினி ஆகிய அரசுகளுடன் யாழ்ப்பாண இராச்சியம் யானை வர்த்தகத்தில் ஈடுபட்டது.
D) யாழ்ப்பாண அரசன் கறுவாவைத் தனது பிரதான வர்த்தக பொருளாதாரமாக கொண்டிருந்தனர். (    )

29) கோட்டை இராச்சிய வீழ்ச்சி தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை.
A) ஆறாம் பராக்கிரமபாகுவின் பின் உறுதியான அரசர்கள் காணப்படாமை.
B) சப்புமல் குமாரன், வீர அழகேஸ்வரர், தமக்குள் முரண்பட்டுக் கொண்டமை.
C) ஏழாம் விஜயபாகு தன் பிள்ளைகளால் கொல்லப்பட்டமை.
D) யாழ்ப்பாண அரசன் கோட்டையை தாக்கியமை. (    )

agaram.lk

30) 1818 கலவரம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை.

A) 1815 கண்டி உடன்படிக்கை சரியாக அமுல்படுத்தப்படாமையே இக்கலவரம் தோன்றக் காரணம் ஆகும்.

B) 1818 கலவரத்தை அடக்க நிலங்களை பாழ்படுத்தும் திட்டத்தை பிரித்தானியர் பின்பற்றினர்.

C) காணிகளை இழந்த விவசாயிகளே இப்போராட்டத்தில் முதலில் ஈடுபட்டனர்.

D) டொரிங்டன் பிரபுவின் அடக்கு முறைகள் இப்போராட்டத்தை தூண்டின. ( )

- **இல 31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புப் புள்ளிக்கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.**

31) கி.பி 411 அளவில் இலங்கைக்கு விஜயம் செய்து கல்வி கற்ற சீன நாட்டவர்.

1. ஹியூங்சாங் 2. யூங்லோ 3. பாகியன்
4. செங்கோ 5. கொஸ்மஸ் ( )

32) ரிஷி கிரிய பற்றிய குறிப்புக்கள் காணப்படும் சாசனம் எது?

1. வல்லிபுர பொற்சாசனம் 2. பனாக்கடுவ செப்பேடு 3. அம்பகமுவ கல்வெட்டு
4. தெவனகல சாசனம் 5. ஹோபிட்டிகம கல்வெட்டு ( )

33) கன்னொருவப் போரில் போர்த்துக்கேயரை எதிர்த்துப் போர்புரிந்த மன்னன் யார்?

1. ரிகிறி பண்டார 2. வீதிய பண்டார 3. நிக்கப்பிட்டிய பண்டார
4. வீதியே பண்டார 5. மகா அஸ்தான ( )

34) கண்டி இராச்சிய காலத்தில் காணப்பட்ட நெசவாளர் அமைப்பு எவ்வாறு அழைக்கப்பட்டது.

1. கொட்டல் பத்த 2. குருவே பத்த 3. மகாபத்த
4. கின்னர பத்த 5. மடிகே பத்த ( )

35) எந்த ஆளுனர் காலத்தில் கோப்பித் தோட்டங்கள் வேமாக பரவின.

1. கென்றிவாட் 2 எட்வேட் பான்ஸ் 3. ஆத்தர் கோர்டன்
4. சார்ள்ஸ் பக்காத்தி 5. வில்லியம் கிரகறி ( )

- **இல 36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவதை எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதாகும். |

agaram.lk

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | பருமக போன்ற செல்வந்தர்களை புதைக்க இப்பன்கட்டுவ போன்ற கல்லறை மயானங்கள் பயன்படுத்தப்பட்டன | உடரஞ்ஞாமடம அகழ்வில் மட்பாண்டமொன்று கண்டெடுக்கப்பட்டது. அது அக்கால தொழினுட்ப முன்னேற்றத்தை காட்டுகின்றது. (   ) |
| 37) | வசப மன்னன் பெரிய குளங்களை இந்தியாவின் கிருஸ்ண நதிப்பகுதியில் காணப்பட்ட அதிகரித்த நெற்கேள்வியை நிவர்த்தி செய்வதற்காக அமைத்தான். | மகாசேனனின் பப்பதந்தக் கால்வாய் மகாவலியில் ஆரம்பமாகி திம்புலாமலைக்கு அண்மித்து 20 மையில்கள் வரை செல்கிறது. (   ) |
| 38) | தம்பதெனியா இராச்சிய காலத்தில் சந்திரபானு என்னும் யாவக அரசன் இரண்டு முறை படையெடுத்தான். | தம்பதெனியாவின் மிகச்சிறந்த மன்னான 4ம் விஜயபாகு கருதப்படுகின்றான். (   ) |
| 39) | ஒல்லாந்தர்கள் இலங்கையில் உரோமன் டச்சு சட்டத்தை அறிமுகம் செய்தார். | ஒல்லாந்தர் காலத்தில் உரோமன் கத்தோலிக்க சமயம் சிறப்பாக வளர்ச்சியுற்றது. (   ) |
| 40) | "இலங்கையரின் போராட்டங்களை அடுத்தே 1833 கோல்புறூக் சீர்திருத்தம் 1889 இல் சிறுமாறுதலுக்கு உள்ளனாது. | கோல்புறூக் சீர்திருத்தத்தின் அடிப்படையில் 21 பேர் சட்டவாக்க கழகத்திற்கு தெரிவு செய்யப்படுவார். (   ) |

agaram.lk

FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | இலங்கை வரலாறு | |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்).**
- **முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு இலங்கையின் புறவுருவப்படம் வழங்கப்படும்.**

### பகுதி A

1) உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்ட பன்னிரெண்டு அம்சங்களையும் குறித்துப் பெயரிடுக.

1. கோண நதி
2. குடிகந்த நதி
3. பாகியன் கல
4. காசாதோட்ட
5. இராவணஎல
6. நாச்சதுவ வாவி
7. அனுராதபுரம்
8. யாழ்ப்பாணம்
9. கம்பளை
10. ஊவா வெல்லச
11. மத்தியமாகாணம்
12. பராக்கிரம சமுத்திரம்

### பகுதி B

2) இலங்கை வரலாற்றை தொகுக்க காலவேடுகள் துணை செய்கின்ற போதிலும் அவை தொல்பொருள் மூலாதாரங்களால் உறுதிப்படுத்தப்படும் விதத்தை சான்றுகளுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

3) இலங்கை வரலாற்றில் மகாசேன மன்னின் சமய, நீர்ப்பாசன சாதனைகளை நுணுக்கமாக பரிசீலனை செய்க. (16 புள்ளிகள்)

4) இராசரட்டை நாகரிக காலத்தில் நடைபெற்ற பின்வரும் சம்பவங்கள் அதன் வீழ்ச்சிக்கு வழிகோலிய விதத்தை விளக்குக.
1. பலவீனமான மன்னர்கள் ஆட்சிக்கு வருதல்.
2. தொடர்ச்சியான தென்னிந்திய படையெடுப்புகள்
3. சோழப் பேரசின் ஆக்கிரமிப்பு கொள்கை. (16 புள்ளிகள்)

5) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டுக்கு வரலாற்று முக்கியத்தவம் தொடர்பாகக் குறிப்புக்களை எழுதுக.
1. சந்திரபானு
2. யாழ்ப்பாண இராச்சியம்
3. தம்பதெனியாக் கால இலக்கியம்.
4. ஆறாம் பராக்கிரமபாகு மன்னன். (8 x 2 = 16 புள்ளிகள்)

### பகுதி C

6) இலங்கையின் கரையோரப் பகுதிகளில் போர்த்துக்கேயர் பின்வரும் துறைகள் தொடர்பில் பின்பற்றிய கொள்கைகளை பரிசீலிக்குக.
1. குறிக்கோள் 2. மத்திய நிர்வாகம் 3. வியாபாரம் (16 புள்ளிகள்)

agaram.lk

7) பெருந்தோட்ட பயிர்ச்செய்கை வளர்ச்சி நன்மையான விளைவுகளையும் தீமையான விளைவுகளையும் கொண்டு இருந்தது.

1. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு அரச அங்கீகாரத்தை பெற்றுக் கொடுத்த சீர்திருத்தம். (1 புள்ளி)
2. பெருந்தோட்டங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
3. பெருந்தோட்ட பயிர்ச்செய்கையின் தீவிர வளர்ச்சிக்கான காரணங்கள் தொகுத்து தருக. (5 புள்ளிகள்)
4. மேலே தரப்பட்ட கூற்றை நுணுக்கமாக பரிசீலிக்குக. (8 புள்ளிகள்)

8) சுதந்திரம் அடைவதற்கு முன் இலங்கையில் அரசியல் முறை வளர்ச்சியில் பின்வரும் சீர்திருத்தங்கள் கொண்டிருந்த பங்களிப்பினை ஆராய்க.

1. கோல்புறூக்
2. டொனமூர் (16 புள்ளிகள்)

9) பின்வரும் எவையேனும் இரண்டிற்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிறுகுறிப்புக்கள் எழுதுக.

1. இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிப் பரவல்
2. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
3. கண்டி உடன்படிக்கை
4. போர்த்துக்கேய – கண்டிப் போர்கள் (16 புள்ளிகள்)

agaram.lk